[1979 ஏப்ரல் 27

ஆ. சென்னைப் பல்கலைக் கழக மதுரை காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்): தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மதுரை காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்): இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

10. மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 1978-79, 1979-80 (விவாதம்)—தொடர்ச்சி.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கைகள் குறித்தும் 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளுக்கான துணை நிதிநிலை அறிக்கைகள் குறித்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது நான் ஆட்சிக் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். மின்சாரம் என்பது ஒரு நாட்டிலே மிக இன்றியமையாத ஒன்றாகும். நாட்டிலே என்ன வளர்ச்சி ஏற்படுகிறது என்று சொன்னாலும், இந்தத் துறையிலே நாம் முனனேறுகிறோம் என்று எந்த விஷயத்தைப் பற்றி எடுத்துச் சொன்னாலும் அத்தனைக்கும் ஆதாரமாக இருக்கக்கூடியது மின்சாரம்தான். ஒரு மனிதனுடைய உடலிலே 'ஸ்பைனல் கார்ட்'—முதுகுத் தண்டு வடம் என்று சொல்வார்கள், அது போல் ஒரு ஆட்சியின் 'ஸ்பைனல் கார்டாக' இருப்பது மின்சாரம் ஆகும்.

இந்த மின்சாரத் துறை இந்த ஆண்டு எந்த அளவு இந்திய துணைக் கண்டத்திலேயே மிக வேகமாக வளர்ச்சி பெற்று மிக நல்ல முறையில் இயங்குகிறது என்பதனை இந்த ஆண்டு அறிக்கை நன்கு எடுத்துக் காட்டுகிறது. அந்த அறிக்கையில், தமிழ்நாடு மின்சார ரியம் வழங்கி இருக்கிற கருத்துக்கள் இந்திய துணைக் கண்டத்திலேயே ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது இந்த அரசு மிகப் பெரிய சாதனையை ஏற்படுத்தி இருக்கிறது. தமிழக அரசின், வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்களை